**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 05–ம் நாளன்று 117 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.68–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **ஹனுவிக்னேஷ்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 117 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 21.10.2008 ஆம் தேதிய பத்மினி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.343 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.11.2023 ஆம் தேதிய 117 வது பிரதிவாதி ஹனுவிக்னேஷ் அவர்கள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.344 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 6, 8 முதல் 15, 18 முதல் 31, 33 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 53, 55 முதல் 64, 67 முதல் 72, 74 முதல் 100, 102 முதல் 107, 109, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது ஈரோடு மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வசித்து வரும் ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 75 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ரவிச்சந்திரனிடமிருந்து பத்மினி வாங்கிய கிரையம் செல்லாது என்பதால் பத்மினியிடமிருந்து நீங்கள் 2023 ல் வாங்கிய கிரையம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் வாக்குமூலத்தில் ரவிச்சந்திரன் தார்சாலைகள் போட்டுள்ளதாக தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் முதல்விசாரணையில் தேவையான நபர்களை கட்சி சேர்க்கவில்லை என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்றும் தேவையான நபர்களை கட்சி சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் வாதி கோவில் வெவ்வேறு மக்களின் பொதுக்கோவில் என்று தவறாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றும் வாதிகோவில்கள் இரண்டும் ஒரே கோவிலுக்கு துணை தெய்வம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோவிலுக்காக Chairman மற்றும் Trustee க்கள் தேவையான தரப்பினர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தை வாங்குவதற்காக பார்த்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வழக்கு நிலுவையிலிருந்த போது தாவா சொத்தை வாங்கியுள்ளதால் நீங்கள் கிரையம் பெற்ற ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முன்பாத்தியஸ்தர் வாங்கிய கிரையபத்திரத்தை

பி.வா.சா.ஆ.8–ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.343–ன் கீழ் கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு உங்கள் முன்பாத்தியஸ்தர் உங்களுக்கு எழுதிக்கொடுக்க சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களில் உங்கள் மனைவி சாட்சியாக கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. தும்பிவாடி கிராமத்தில் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. நீதிமன்றத்திற்கு யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்ததின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.05 18:10:12 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.